**அம்பகமுவ பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மே 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பகமுவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2014 ஆம் ஆண்டில் கமநெகும திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்த நோர்வூட் கோயில் சனசமூக நிலையத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்த நிலையில் நிதி ஒதுக்கப்பட்டமையினால் நிர்மாணக் கடன் பட்டோர் மற்றும் நிர்மாணக் கடன் கொடுத்தோர் ரூபா. 5,000,000 வீதம் நிதிக் கூற்றுக்களில் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் பரிந்துரைக்கமைய சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | 2011 ஆம் ஆண்டு முதல் 2016 டிசம்பர் 31 ஆம் திகதி வரை 19 சந்தர்ப்பங்களில் வருமானங்களுக்காக வைப்பிலிடப்பட்டுள்ள ரூபா. 858,250 மீளச் செலுத்த வேண்டிய | சீர் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் சீர் செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| | வைப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | |
| (iii) | 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை சபைக்கு மூலதன நன்கொடைகளாக பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளின் மூலம் குறித்த திட்டங்களை முழுமையாக நிறைவு செய்யாது நிதிகளை வங்கியில் இட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிர்மாணக் கடன் பட்டோர் பெறுமதி ரூபா. 14,638,340 ஆகவும் நிர்மாணக் கடன் கொடுத்தோர் பெறுமதி ரூபா. 28,779,077 ஆகவும் நிதிக் கூற்றுகளில் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. அத் தொகைகள் அறவிடப்பட வேண்டியதற்கான அல்லது செலுத்தப்பட வேண்டியதற்கான எவ்வித ஆதாரமும் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்குகள் சீர் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் சீர் செய்தல். |

**(ஆ) கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

**தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

உரிமைச் சான்றிதழ்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக மொத்தம் ரூபா. 316,500 பெறுமதியான 07 காணித் துண்டுகளின் உரிமையினை உறுதி செய்துகொள்ள முடியாமல் போனது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உரிமைச் சான்றிதழ்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக மொத்தம் ரூபா. 316,500 பெறுமதியான 07 காணித் துண்டுகளின் உரிமையினை உறுதி செய்துகொள்ள முடியாமல் போனது. | உரிமைச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | காணிகள் மதிப்பிடப்பட்டிருந்த போதும் அறிக்கைகள் இதுவரை கிடைக்கப்பெறாத அதேவேளை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளை சுவீகரித்தல் மற்றும் உரிமைச் சான்றிதழ்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் 01 வருடத்தைத் தாண்டியிருந்த நிர்மாணக் கடன் பட்டோர் மீதி ரூபா. 41,808,190 ஆகவிருந்தது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இம் மீதிகள் அதிகமாக முன்னைய வருடங்களின் ஒதுக்கீடுகள் வங்கியில் இடப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ளதுடன் அறவிட முடியா நிலுவைகள் ஒதுக்கப்பட்டு சீர் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய 08 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 88,285,522 ஆகவிருந்ததுடன் இதில் ரூபா. 68,681,832 ஒரு வருடத்திற்கும் மேலாக செலுத்தப்படாதிருந்தது. | செலுத்த வேண்டிய நிலுவைகளைச் செலுத்தித் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒரு வருடத்திற்கும் குறைவான நிலுவைகள் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய நிலுவைகள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இல 53 மற்றும் 1988 இல 56 ஆகிய சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்ட 1980 இன் 47 ஆம் | செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த 03 தொழில்களுக்கான அனுமதிப் பத்திரம் மீண்டும் | தொழில்கள் தொடர்பான ஒரு ஆய்வினை மேற்கொண்டு அனுமதிப்பத்திர | அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க தேசிய சுற்றாடல் சட்டம். | புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ம் பெற வேண்டிய சகல நிறுவனங்களையும் இனங்கண்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 189 | 1988 முதல் 2007 வரையிலான காலப்பகுதியினுள் 21 சந்தர்ப்பங்களில் ரூபா. 118,659 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் காசோலைகளின் பெறுமதியினை பணமாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன். |
| (இ) | நிதிப் பிரமாணம் 237 | வாகனத் திருத்தம் ஒன்றிற்காக ரூபா. 292,540 தொழில்நுட்ப அதிகாரி ஒருவரின் சான்றிதழ் இன்றி செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த பரிந்துரைகள் பெறப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். | தற்காலத்தில் பொருத்தமான ஒரு தொழில்நுட்ப அதிகாரியின் பரிந்துரையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 571(2) | 22 சந்தர்ப்பங்களில் வைப்பிலிடப்பட்டு 02 வருடங்களைத் தாண்டியிருந்த ரூபா. 1,014,290 பெறுமதியான வைப்புகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். | 2019 இல் சீர் செய்வேன். |
| (உ) | பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) பிரமாணம் 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பான ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.. | ஓவ்வொரு வருடமும் காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பான ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். | ஏற்கனவே ஒரு ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. |
| (ஊ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1988 | வீத வரிக்கான சொத்துக்கள் மதிப்பீடு | சுற்றறிக்கைக்கமைய | மதிப்பீடு செய்யுமாறு மதிப்பீட்டுத் |

| | | | |
|---|---|---|---|
| மே 17 ஆம் திகதிய 1988/22 இலக்க சுற்றறிக்கை. | 05 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | செயற்படல் வேண்டும். | திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. |

**1.6 வரித் தேவைகளுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண வரிச் சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு முன்னர் மற்றும் மீளாய்வாண்டினுள் முறையே அறவிடப்பட்ட ரூபா. 2,350,361 மற்றும் பெறப்பட்ட முத்திரை வரி மற்றும் அறவிடப்பட்ட ரூபா. 958,253 முத்திரை வரி தேசிய வருமான ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுத்தி வைக்கப்பட்ட வரித் தொகையைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தவணை அடிப்படையில் வரித் தொகையினைச் வெலுத்த நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் முன்னைய வருடத்தினுள் சேகரிக்கப்பட்ட ரூபா. 738,143 தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி தேசிய வருமான ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுத்தி வைக்கப்பட்ட வரித் தொகையைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தவணை அடிப்படையில் வரித் தொகையினைச் வெலுத்த நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,026,854 ஆகவிருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

2018 மார்ச் 20 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்த சபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஒன்பது மாத காலத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம்,

சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2018**

| | வருமான வகை | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,070,677 | 1,573,804 | 1,761,446 |
| (ii) | வாடகை | 2,387,650 | 2,504,792 | 2,339,603 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,242,900 | 1,242,900 | 182,420 |
| (iv) | ஏனைய வருமானம் | 7,228,663 | 7,539,978 | 15,595,406 |
| | மொத்தம் | 12,929,890 | 12,861,474 | 19,878,875 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயற்றிறன்

**வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்காகப் பெற்றிருந்த 07 வாடகைக்காரர்கள் 02 தொடக்கம் 10 வருடங்களுக்கிடைப்பட்ட காலத்திலிருந்து வாடகை செலுத்துவதை கைவிட்டிருந்தனர். 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இந் நிலுவை ரூபா. 1,009,093 ஆகவிருந்தது. | பிரதேச சபைச சட்டத்தின் விதிமுறைகளுக்கமைவாக செயற்பட்டு நிலுவைப் பணம் அறவிடப்படல் வேண்டும். | நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா. 1,843,676 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 13,751,730 அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) 2018 ஏப்ரல் - திசெசம்பர் காலப்பகுதிக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2017 நவம்பர் 02 ஆம் திகதிய 2043/57 இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் அதுவரை காணப்பட்ட அம்பகமுவ பிரதேச சபை கலைக்கப்பட்டு அதற்குப் பதிலாக 03 புதிய பிரதேச சபைகள் அமைக்கப்பட்டிருந்தன. அதனடிப்படையில் அமைக்கப்பட்ட அம்பகமுவ பிரதேச சபை 2018 ஆம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதிக்காக புதிய வரவு செலவுத் திட்டமொன்றைத் தயாரித்து அனுமதி பெறாது வருடத்தின் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். | தேரியாமல் ஏற்பட்ட ஒரு தவறாகும். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பான அறிவை பிரதேச சபை போதியளவு பெற்றிருக்காத அதேவேளை மீளாய்வாண்டினுள் அது தொடர்பாக நிலையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கான திட்டம் அமைக்கப்படல் வேண்டும். | தற்பொழுது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக அறிந்து வைத்துள்ளதுடன் அதற்கான விடயப் பொறுப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். |

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் வாகனங்களுக்கான எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக 1996 மார்ச் 03 ஆம் திகதி மஸ்கெலிய பல்நோக்குச் சங்கத்திற்கு வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா. 75,000 தொகை மீளப் பெறப்பட்டிருக்கவில்லை. | குறித்த முற்பணம் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபையின் தீர்மாணத்திற்கிணங்க செயற்படுவேன். |
| (ஆ) | 1995 முதல் 2013 வரை 177 சந்தர்ப்பங்களில் பல்வேறு தேவைகளுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா. 1,615,162 முற்பணம் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | முற்பணம் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதுவலை முற்பணத்தில்ரூபா. 137,490 அறவிடப்பட்டுள்ளது. |

## 3.3. ஊழியர் வெற்றிடங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 பதவிகளில் 55 வெற்றிடங்களும் 04 பதவிகளில் 08 மிகைகளும் காணப்பட்டன. காணப்பட்டன. | விரைவாக ஊழியர் உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையை முறைப்படுத்தவும் நடவடிக்கை வேண்டும் | உரிய நிறுவனங்பகள் அறவூட்டப்பட்டுள்ளன. . |

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 நவம்பர் 30 ஆந் திகதி நீர் வழங்கல் செயற்திட்டமொன்றுக்காக ரூபா 196,932 முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | முற்பணம் அறவிடப்பட வேணடும். | முற்பணத்தை தீர்வுசெய்யுமாறு நிவைூட்டல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

இச்செயற்திட்டத்தின் எதுவித வேலைகளும் ஆரம்பிக்கப்படாமல் இருந்ததுடன் கொடுப்பனவு செய்த முற்பணமும் தீர்வுசெய்யப்பட்டிருக்க வில்லை

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாகாண சபை உறுப்பினர் நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 2,442,500 தொகையான 41 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாதிருந்த போதும் அவை செயற்படுத்தப்பட்டதாக ஆவுணங்கள் உள்ளடக்கப்பட்ட செயற்திட்ட ஆவணங்கள் தயாரித்து செயலாற்றல் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கிடைக்கும் நிதிஏற்பாடு ஆண்டில் பயன்படுத்தப்பட வேண்டும் | தற்போது 66% செயன் முன்னேற்றம் கையேற்கப்பட்டுள்ளது. |

### 3.6 விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,500,000 பெறுமதியான மோட்டார் கேடர் பிரதேசத்தின் நில முரண்பாடு பிரகாரம் பயன்படுத்த முடியாமையால் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு யைளிக்கப்பட வேண்டும். | உரிய அதிகாரிகள் தெரியப்படுத்தப் பட்டுள்ளனர். |
| (ஆ) சபைக்குரிய 04 மோட்டார் வாகனங்கள் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்களும் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் ஓட்டத்திலிருந்து | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

அகற்றப்பட்டிருந்ததுடன் திருத்தியமைப்பதற்கு அல்லது கை தவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.